

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (19.08.2025) சென்னை, சைதாப்பேட்டையில் “உங்களுடன் ஸ்டாலின்” திட்ட முகாமினை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி.ஆர்.பிரியா, மண்டலக்குழுத் தலைவர் கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர்கள் தா.மோகன்குமார், வழக்கறிஞர் ப.சுப்பிரமணி மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.




தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் தலைமையில் வீட்டு வசதி வாரியக் கூட்டம் CIT நகர் வாரியத் தலைமை அலுவலகத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அரசுச் செயலாளர் காகர்லா உஷா வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குனர் (பொறுப்பு) பா.கணேசன், நிதித்துறை துணை செயலாளர் பிரதீக் தயாள், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குனர் ஷ்ரேயா சிங், வாரிய செயலாளர் மற்றும் பணியாளர் அலுவலர் .பாலசுப்ர மணியன், தலைமை வருவாய் அலுவலர் புண்ணியகோடி, மாவட்ட வருவாய் அலுவலர் சைலேந்தர், வாரிய நிதி ஆலோசகர் தரணிபாபு, தலைமை பொறியாளர்கள் கண்ணன், சரவணன் உள்ளிட்ட அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### கரூர் தண்ணீர் பந்தல் பாளையம் – வீரராக்கியம் வரை

# ரூ.700 கோடியில் சுற்று வட்டச் சாலை!

## மாவட்டக் கழகச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தகவல்!



கரூர், ஆக. 21 –

கரூர் தண்ணீர்பந்தல் பாளையம் முதல் வீரராக்கியம் வரை ரூ. 700 கோடி மதிப்பில் புதிய சுற்று வட்டச் சாலை அமைக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுமதி வழங்கி உள்ளார் என கரூரில் சட்டமன்ற உறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தெரிவித்தார்.

கரூர் மாநகராட்சி வார்டு எண் 8.9 மற்றும் மண்மங்கலம் வட்டம் ஆகிய பகுதிகளுக்கு ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. கரூர் மாவட்ட ஆட்சியர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். 26 பயனாளிகளுக்கு ரூ. 9.90 லட்சம் மதிப்பீட்டில் நலத்திட்ட உதவிகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்டக் கழகச் செயலாளர் வி. செந்தில் பாலாஜி வழங்கினார்.

பின்னர் வி.செந்தில் பாலாஜி கூறியதாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ”உங்களுடன் ஸ்டாலின் எனும் சிறப்பான திட்டத்தை தொடங்கி வைத்துள்ளார்கள். இத்திட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் 10000 முகாம்கள், கரூர் மாவட்டத்தில் 179 முகாம்கள் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதில் 60 முகாம்கள் நிறைவு பெற்றுள்ள நிலையில் 49333 கோரிக்கை மனுக்கள் பொதுமக்களிடமிருந்து வரப்பெற்றுள்ளன. இம்மனுக்களில் 18,074 மனுக்கள் கலைஞர் மகளிர் உரிமைத் தொகைக் கோரிக்கை மனுக்களாகும். பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு அன்றைய தினமே தீர்வு காணப்படுகிறது. சில மனுக்களுக்கு ஒருவார காலம் எடுத்துக் கொள்ளப்பட்டு விசாரிக்கப்பட்டு தீர்வு வழங்கப்படுகிறது. அதிகபட்சம் 45 நாட்களுக்குள் ”உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனும் உத்தரவுகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சுற்றுவட்ட சாலை அமைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். கரூர் தண்ணீர்பந்தல் பாளையம் முதல் வீரராக்கியம் வரை மொத்த திட்ட மதிப்பு ரூ 700 கோடியில். புதிய சுற்றுவட்டச் சாலை அமைப்பதற்கான நிதிகளையும் அரசாணைகளையும் வழங்கியுள்ளார்கள். இதில் முதற்கட்டமாக நிலமெடுப்பதற்காக ரூ.72 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மண்மங்கலம் ஊராட்சியில் வட்டாட்சியர் அலுவலகம், புத்திரப்பதிவு அலுவலகம். மருத்துவமனை விரிவாக்க கட்டிடம் என வளர்ச்சித் திட்டங்களையும் வழங்கியிருக்கிறார்கள்.

‘உங்களுடன் ஸ்டாலின்’ முகாமில் இன்றைய தினம் பொதுமக்கள் அளித்துள்ள கோரிக்கை மனுக்களுக்கு உரிய தீர்வு காணப்படும் எனும் உறுதியை தெரிவித்துக்கொண்டு. 5 ஆண்டுகள் தொடங்கி 40 ஆண்டுகள் வரை குடியிருந்தும் பட்டா இல்லாமல் வாழும் பொதுமக்களுக்கு பட்டா வழங்கப்படுவதற்காக 28,000 பட்டாக்கள் வழங்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு, இதுவரை கரூர் மாவட்டத்தில் 45000 பயனாளிகளுக்கு இலவச வீட்டு மனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன இவ்வாறு செந்தில்பாலாஜி தெரிவித்தார்.


இதனைத் தொடர்ந்து வருவாய்த் துறையின் சார்பாக 13 நபர்களுக்கு சாதிச் சான்று. வருமானச் சான்று. இருப்பிடச் சான்று, முதல் பட்டதாரிச் சான்று. சிறு குறு விவசாயி சான்று மற்றும் பட்டா மாறுதல் உள்ளிட்ட சான்றிதழ்களையும், கூட்டுறவுத் துறையின் சார்பில் 6 பேருக்கு ரூ. 4.92 இலட்சம் மதிப்பீட்டில் கால்நடை பராமரிப்பு கடனுதவி, மாநகராட்சியின் சார்பில் 6 நபர்களுக்கு சொத்துவரி மற்றும் குடிநீர் பெயர் மாற்றத்திற்கான ஆணை, கரூர் நகர கூட்டுறவு வங்கி சார்பாக 1 நபருக்கு ரூ.4.98 இலட்சம் மதிப்பீட்டில் வீட்டு அடமானக் கடனுதவிகளும் என மொத்தம் 26 நபர்களுக்கு ரூ.9.90 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.

இம்முகாமில் மாநகராட்சி மேயர் வெ.கவிதா, மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன் மாநகராட்சி ஆணையர் கே.எம்.சுதா, துணை மேயர் ப.சரவணன், மண்டலக்குழு தலைவர்கள் எஸ்.பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, வெங்கமேடு சக்திவேல், மாமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

### உள்ளாட்சி, கிராம நிர்வாகத்தின்கீழ்

# வேலை வாய்ப்புகளை உருவாக்க ஒன்றிய அரசிடம் திட்டம் உள்ளதா?

## மாநிலங்களவையில் – இரா.கிரிராஜன் கேள்வி!



புதுடெல்லி, ஆக. 21 -

தமிழ்நாட்டில் கிராமப்புற வாழ்வாதார பயிற்சி மையங்களை நிறுவுவதற்கும், உள்ளாட்சி மற்றும் கிராம நிர்வாகத்தின் கீழ் வேலைவாய்ப்புகளை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசிடம் என்னென்ன திட்டங்கள் உள்ளன என்று நாடாளுமன்றத்தில் இரா.கிரிராஜன் கேள்வி எழுப்பி உள்ளார்.

நாடாளுமன்ற கூட்டத் தொடரில் கலந்துகொண்டுள்ள திமுக எம்.பி. இரா. கிரிராஜன், தமிழ்நாட்டில் கிராமப்புற மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிக்கும் வகையில் கிராமப்புற வாழ்வாதார பயிற்சி மையங்களை நிறுவுவதற்கு என்ன திட்டங்கள் உள்ளன? உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் கிராம நிர்வாகத்தின் கீழ் பல்வேறு வேலைவாய்ப்புகளை உருவாக்க தமிழ்நாட்டற்கு ஒன்றிய அரசு ஏதேனும் நிதி ஒதுக்கியுள்ளதா? என பஞ்சாயத்து ராஜ் அமைச்சரிடம் கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதில் அளித்த பஞ்சாயத்து ராஜ் அமைச்சர் எஸ்.பி. சிங் பாகல், தமிழ்நாட்டில் தனியாக கிராமப்புற வாழ்வாதார பயிற்சி மையத்தை நிறுவும் திட்டம் எதுவும் இல்லை என்றும், சமூகப் பணியாளர்கள் மற்றும் திட்ட ஊழியர்களுக்கு பயிற்சி அளிக்க மாநில ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்து ராஜ் நிறுவனத்தில் (SIRD&PR) கிராமப்புற வாழ்வாதாரத்திற்கான தனி மையங்கள் உள்ளதாக தெரிவித்துள்ளார்.

சுயதொழில் திறன் பயிற்சியை வழங்குவதற்காக அனைத்து மாவட்டங்களிலும் கிராமப்புற சுயதொழில் பயிற்சி நிறுவனங்கள் (RSETI) நிறுவப்பட்டுள்ளதாகவும், தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புதுமை நிறுவனம் (EDII) உள்ளிட்ட நிபுணத்துவ நிறுவனங்களுடன் இணைந்து தொழில்முனைவோர் பயிற்சியும் வழங்கப்படுவதாகவும் பதில் அளிக்கப்பட்டுள்ளது.

கிராமப்புறங்களில் வயதுவந்த உறுப்பினர்களைக் கொண்ட ஒவ்வொரு வீட்டிற்கும் குறைந்தது நூறு நாட்கள் உத்தரவாதமான கூலியுடன் கூடிய வேலை வாய்ப்பை வழங்குவதை நோக்கமாக கொண்டு, மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு உத்தரவாதத் திட்டம் செயல்படுத்தபடுகிறது என்றும் பதில் கூறியுள்ளார்.

இந்த திட்டத்தின்படி, 2020-21 முதல் 2024-25 வரை 17,291.35 லட்சம் பணி நபர்களுக்காக, ரூ. 48,389.82 கோடி விடுவிக்கப்பட்டுள்ளதாகவும் பதிலில் விவரங்கள் தரப்பட்டுள்ளன.

மாநிலப் பட்டியலில் உள்ள ஊராட்சி நிர்வாகத்திற்கு மாநில அரசின் முயற்சிகளை, ஒன்றிய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் ஆதரித்து, நிறைவு செய்வதாகவும் அவரது பதிலில் கூறப்பட்டுள்ளது.

ஊராட்சி அமைப்புகளின் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் மற்றும் செயல்பாட்டாளர்களின் திறனை வளர்ப்பது மற்றும் பயிற்சி அளிப்பதன் மூலம் பஞ்சாயத்துகளை வலுப்படுத்தும் முதன்மை நோக்கத்துடன் மத்திய அரசின் நிதியுதவி பெற்ற ராஷ்ட்ரிய கிராம ஸ்வராஜ் அபியான் (RGSA) செயல்படுத்தப்படுவதையும் பதிலில் குறிப்பிட்டு ள்ளார்.

கிராம ஊராட்சி அலுவலகம், அதன் கணினிமயமாக்கல் போன்ற உள்கட்டமைப்பு ஆதரவை வழங்குதல், ஊராட்சிகளுக்கிடையேயான ஆரோக்கியமான போட்டி சூழலை ஊக்குவித்தல், சேவைகள் மற்றும் பொது நலனை மேம்படுத்துவதில் சிறப்பாகச் செயல்படும் பஞ்சாயத்துகளுக்கு ஊக்கத்தொகை உள்ளிட்ட விருதுகள் வழங்குதல் ஆகிய திட்டங்கள் தமிழ்நாடு உட்பட நாட்டின் அனைத்து மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் உள்ள அனைத்து கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கும் செயல்படுத்தப்படுகின்றன என பதிலில் விவரிக்கப் பட்டுள்ளது. கிராமப்புற உள்ளாட்சி அமைப்புகளில் (RLB) பல்வேறு மேம்பாட்டுப் பணிகளுக்காக, மத்திய நிதி ஆணையத்தின் (CFC) மானியங்களைப் பெறுவதாகவும் அமைச்சரின் பதிலில் தகவல் வழங்கப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆண்டுகளில் தமிழ்நாட்டிற்கு மத்திய நிதி ஆணையத்தின் மூலம் ரூ. 14,782 கோடியும், தேசிய கிராம சுயாட்சி இயக்கத்தின் மூலம் ரூ. 167.19 கோடி, ஊராட்சிகளுக்கான ஊக்கத்தொகையாக ரூ. 9.73 கோடி ஆகியவை வழங்கப்பட்டுள்ளதாக பதில் தெரிவிக்கப்பட்டு ள்ளது.

பஞ்சாயத்து ராஜ் திட்டங்களின் கீழ் முன் கூட்டியே எந்த உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நேரடியாக நிதி ஒதுக்குவது இல்லை என்றும், சம்பந்தப்பட்ட மாநிலம் தான் உள்ளாட்சி அமைப்புகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்து விடுவிக்கிறது என்பதையும் பதிலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனாலும், 2021-22ஆம் ஆண்டு முதல், ஆண்டுதோறும் நடைபெறும் தேசிய பஞ்சாயத்து விருதுகள் போட்டியில் வெற்றி பெறும் உள்ளாட்சி அமைப்புகளுக்கு, ஊக்கத்தொகை திட்டத்தின் கீழ், நிதி நேரடியாக வழங்கப்படுவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

### வார இறுதி நாட்களை ஒட்டி

# 1,040 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும்!

## போக்குவரத்துக் கழகம் தகவல்!

சென்னை: ஆக. 21 -

வார இறுதி நாட்களை ஒட்டி 1,040 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என போக்குவரத்துக் கழகம் அறிவித்துள்ளது. கிளாம்பாக்க த்தில் இருந்து ஆக.22ல் 340 பேருந்துகளும், 23ம் தேதி 350 பேருந்துகளும், கோயம்பேட்டில் இருந்து ஆக.22, 23ம் தேதிகளில் தலா 55 சிறப்புப் பேருந்துகளும், மாதவரத்தில் இருந்து ஆக.22, 23ம் தேதிகளில் தலா 20 சிறப்புப் பேருந்துகளும் இயக்கப்பட உள்ளன.

மேலும் வெளியான அறிக்கையில்; 22/08/2025 (வெள்ளிக்கிழமை) 23/08/2025 (சனிக்கிழமை) மற்றும் 24/ 08/2025 (ஞாயிறுக்கிழமை) வார விடுமுறை நாட்களை முன்னிட்டு சென்னையிலிருந்தும் இதர இடங்களுக்கும் மற்றும் பிற இடங்களிலிருந்தும் கூடுதலான பயணிகள் தமிழகம் முழுவதும் பயணம் மேற்கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள் தினசரி இயக்கப்படும் பேருந்துகளுடன் கூடுதலாக சிறப்பு பேருந்துகளை இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

சென்னை கிளாம்பாக்கத்திலிருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம். மதுரை. திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னி யாகுமரி, தூத்துக்குடி, கோயம்புத்தூர், சேலம், ஈரோடு. திருப்பூர் ஆகிய இடங்களுக்கு 22/08/2025 (வெள்ளிக்கிழமை) அன்று 340 பேருந்துகளும், 23/08/ 2025 (சனிக்கிழமை) 350 பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. சென்னை கோயம்பேட்டிலிருந்து திருவண்ணாமலை, நாகை, வேளாங்கண்ணி, ஓசூர். பெங்களூரு ஆகிய இடங்களுக்கு 22/8/2025 வெள்ளிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் 23/08/2025 சனிக்கிழமை அன்று 55 பேருந்துகளும் மேற்கூறிய இடங்களிலிருந்தும் இயக்க திட்டமிடப்பட் டுள்ளது மற்றும் பெங்களூர், திருப்பூர், ஈரோடு மற்றும் கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலிருந்தும் பல்வேறு இடங்களுக்கும் 200 சிறப்பு பேருந்து களும் இயக்க திட்ட மிடப்பட்டுள்ளது. மாதாவரத்திலிருந்து 22/08/2025 அன்று 20 பேருந்துகளும் 23/08/2025 அன்று 20 பேருந்துகளும் சிறப்பு பேருந்துகள் இயக்கப்படுகிறது.

மேலும், ஞாயிறு அன்று சொந்த ஊர்களில் இருந்து சென்னை மற்றும் பெங்களூர் திரும்ப வசதியாக பயணிகளின் தேவைகேற்ப அனைத்து இடங்களிலிருந்தும் சிறப்பு பேருந்துகள் இயக்கிட திட்டமிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்த வார இறுதியில் வெள்ளிக்கிழமை அன்று 6,233 பயணிகளும் சனிக்கிழமை 2,966 பயணிகளும் மற்றும் ஞாயிறு அன்று 5,510 பயணிகளும் பயணம் மேற்கொள்ள முன்பதிவு செய்துள்ளனர். இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்க வாய்ப்பு உள்ளதால் தொலைதூர பயணம் மேற்கொள்ள இருக்கும் பயணிகள் கூட்ட நெரிசலைதவிர்க்கும் பொருட்டு தங்களது பயணத்திற்கு WWW.TNSTC.IN மற்றும் MOBILE APP மூலம் முன்பதிவு செய்து பயணிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இச்சிறப்பு பேருந்து இயக்கத்தினை கண்காணிக்க அனைத்து பேருந்து நிலையங்களிலும் போதிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். எனவே. பயணிகள் மேற்கூறிய வசதியினை பயன்படுத்தி தங்களது பயணத்தினை மேற்கொள்ள இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

# கொளத்தூர் மேற்கு பகுதியில் - அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, ஆக. 21 -

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு “அன்னம் தரும் அமுதக்கரங்கள்” மாபெரும் திட்டத்தின் 181 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் இனிய பிறந்த நாளை முன்னிட்டு நேற்று முன்தினம் (19.08.2025), கொளத்தூர் மேற்கு பகுதி: 1) வட்டம் 69 அ, S.R.P கோயில் தெரு, அகரம், காந்தி சிலை அருகில். 2) வட்டம் 66, பாலாஜி நகர் சந்திப்பு, சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு தமிழ்நாட்டு நலன்களையும், எதிர் காலத்தையும் யாருக்காகவும், எதற்காகவும் விட்டுத் தர மாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இது தான் ஒரே இலக்கு!” என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எ.நாகராசன், ஐ.சி.எப்.வ. முரளிதரன், கே.சந்துரு, சி.மகேஷ்குமார், தேவஜவகர், சரிதா மகேஷ்குமார், எஸ்.பன்னீர் செல்வம், துரைகண்ணன், ம. அசோக்குமார், ஆர்.எஸ். சித்திக், எஸ்.தனசேகர், டி. யோகப்பிரியா, என்.தாவூத் பீ, பி.அமுதா, சி. ஸ்ரீதணி, வட்ட கழக செயலாளர்கள்: பி.ஊமைத்துரை, கே.பி.ஆதவன்மணி, என்.பொன்முடி, கே. ஜார்ஜ்குமார், பி.டி. சி.எஸ்.ரவி, பா. அன்பரசு, டி.சந்திரசேகர், எஸ்.முருகன், எம்.பி.தமிழ்ச்செல்வன், என்.சௌந்தர், என். பவுல்ராஜ், என்.இராமச்சந்திரன், எம்.ஜெ.சி.பாபு, பி. அதிபதி. ஒருங்கிணைப்பாளர்கள்: சொ.வேலு, எஸ். முரளி, ஆர்.ராஜன், கே.ஆர். அபரஞ்சி, அசோக் ஜெயின், பி. விஜயகுமார், ம.அசோக்குமார், எல்.சம்பத்குமார், க.பா.பிரதீப்குமார், மற்றும் கழக நிர்வாகிகள், முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்டம் சென்னிமலை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பாளையம் ஊராட்சி, கருக்கன்காட்டு வலசு பகுதியில் ஈரோடு நாடாளுமன்றத் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.18 இலட்சம் மதிப்பீட்டில் சாலை மேம்பாட்டுப் பணியை ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் தொடங்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய கழக செயலாளர் செங்கோட்டையன், இளங்கோ உள்ளிட்ட பலர் உள்ளனர்.




திருப்பூர் மாநகராட்சி, 49வது வார்டு, ஆர்.வி.நகர் பகுதியில் முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வீடு தேடிச் சென்று வழங்கும் வாகனத்தினைத் துவக்கி வைத்து மூத்த குடிமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வீடு தேடிச் சென்று மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டச் செயலாளர் ந.தினேஷ்குமார் வழங்கினார். இதில் வட்டக் கழக செயலாளர் மு.மனோகரன், பொறுப்பாளர் ஜேம்ஸ் உள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.